(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 188.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 மே 25, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1064/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) 2009, 2010, 2011 இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், மானியங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு பெறப்பட்ட கடன்கள் மானியங்கள் எக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெறப்பட்ட கடன்களின்,

(i) அனைத்தும் உள்ளடங்கிய சராசரி வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) கடன் காலப்பகுதியின் முடிவில் மொத்த வட்டி மற்றும் கடன் கட்டணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1167/ ' 11

2.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் ஐ.ஓ.சீ. (IOC) எனும் இந்தியக் கம்பனிக்கு வரி விடுப்பு அடிப்படையில் 100 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமா;

(iii) ஆமெனில், 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரியின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எரிபொருள் நிரப்பும் நிலையங்களினால் செலுத்தத் தவறிய வரியை அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு இலங்கை முதலீட்டுச் சபை ஐ.ஓ.சீ கம்பனிக்கு அறிவித்துள்ளதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) அக்கம்பனி வரி செலுத்த வேண்டியதில்லையென முதலீட்டுச் சபையின் தவிசாளராலேயே சம்பந்தப்பட்ட கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

(v) அத்தகைய அறிவித்தல் வழங்கியமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஐ.ஓ.சீ. கம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த தவறியமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1327/ '11

3.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கண்டி மாவட்டத்தின் பொத்தபிட்டிய வீதியில் மெனித்தவேலவில் இருந்து திஸ்மட வரையான பகுதியைப் புனரமைக்கும் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டு ஏறக்குறைய ஒரு வருடகாலம் கழிந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(ii) மேலே உள்ளவாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்படக் காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகளைத் துரிதமாக ஆரம்பித்து பகுதிவாழ் மக்களின் போக்குவரத்து வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில் அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1776/ '11

4.

கௌரவ அஜித் குமார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) போப்பே – போத்தல பிரதேச சபைத் தலைவர் பயன்படுத்துகின்ற உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை செலவிடப்பட்டுள்ள,

(i) எரிபொருள் செலவினம்;

(ii) பராமரிப்புச் செலவினம்;

(iii) சாரதிகளுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான "பொதுச் சந்தைகளின்" எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு மக்கள் சந்தையிலிருந்தும் 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கிடைத்த வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை யாவையென்பதையும்;

(iii) பிரதேச சபை நிதியத்திலிருந்து மேற்படி முன்பள்ளிகளுக்காக 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வருடாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1998/ '11

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நிமல் புஞ்சிஹேவா என்பவர்,

(i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராகப் பணிபுரிந்து சம்பளம் பெறுகிறார் என்பதையும்;

(ii) இதற்கு மேலதிகமாக இவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் (சட்டம்) ஆகவும் பணிபுரிந்து சம்பளம் பெறுகிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிமல் புஞ்சிஹேவா என்பவரின் வயது 60 ஐ தாண்டியுள்ளதா;

(ii) அரசாங்கப் பதவிகள் இரண்டை ஒரே தடவையில் வகிப்பதற்கு நிமல் புஞ்சிஹேவா என்பவருக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(iii) இன்றேல், மேற்படி நபர் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2027/ '11

6.

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (2)

(அ) (i) தற்போது முறைசாரா மற்றும் தவறான வழிகளில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் வீட்டுப் பணிகள் , சிறு பிள்ளைகளைப் பேணல், மற்றும் வீட்டுத் தோட்டப் பராமரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதையும்;

(ii) இவ்வாறு பணியில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பெரும்பாலும் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு சிறுவர்கள், மற்றும் பெண்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதை ஒழிக்கும் பொருட்டும், ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மையாக அமையும் பொருட்டும், மேற்கூறிய தொழில்களை எதிர்பார்ப்பவர்களை பதிவு செய்யக்கூடியவாறான முறைசார்ந்த முறையியலொன்றுடன் கூடிய நிறுவனமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தாபிக்கப்படும் அவ்வாறான நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்டவர் களுக்கு மாத்திரம் மேலே (அ) i இல் குறிப்பிட்டவாறான தொழில்களை முறைசார்ந்த விதத்தில் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2033/ '11

7.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரன்டம்பேயில் அமைந்துள்ள இளவல் படையணி பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) தற்போது அந்த முகாமில் வசதிகள் வழங்கப்பட்டுள்ள இளவல் படையணிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) அந்த முகாமில் ஒரே தடைவையில் தங்கியிருந்து பயிற்சி பெறக்கூடிய இளவல் படையணி மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) அந்த எண்ணிக்கையைத் தாண்டிய மாணவர் எண்ணிக்கையை பங்குகொள்ளச் செய்து பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதா;

(v) இளவல் படையணிப் பயிற்சியைப் பெறக்கூடிய மாணவர்களின் ஆகக் குறைந்த வயதெல்லை யாது;

(vi) மேற்படி வயதுக்குக் குறைந்த மாணவர்கள் அந்த முகாம்களில் பயிற்சி பெற்றுள்ளார்களா;

(vii) அவ்வாறெனின் அந்த மாணவர்களை பங்குகொள்ளச் செய்த முகாம்களுக்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1656/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எந்துராகல தோட்டத்துக்கு உரித்தான கொட்டகல பெருந்தோட்டக் கம்பனியின் தேயிலை மற்றும் இறப்பர் தொழில்சாலை சுற்றயலில் உள்ள கட்டடங்கள் பல வருட காலமாக பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலையை மீண்டும் திறந்து பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதனை வேறு பயனுள்ள நடவடிக்கைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், எவ்வகையான நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1747/ ’11

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் கஸினோவை சாதாரண வியாபார நடைமுறையாக ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்;

(ii) இன்றேல், கஸினோ சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சட்டமாக்கப்பட்டு வரிவிதிக்கப்பட்டது ஏன் என்பதையும்;

(iii) கஸினோ மூலம் நாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1999/ ’11

10.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவில் சேவையாற்றுகின்ற நிமல் புஞ்சிஹேவா என்பவர் மாதாந்தம் பெறும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவர் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனமொன்றை பயன்படுத்துகின்றா என்பதையும்;

(iii) மேற்படி நபர் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு மேலதிகமாக வேறொரு அரச தொழிலிலும் ஈடுபட்டுள்ளாரென்பது காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு வெளிப்படுத்தியுள்ளாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேவையாற்றுதல் சார்பில் ரூபா எண்பதாயிரம் (ரூ.80,000/-) சம்பளத்தை பெறுகின்றாரென்பதையும்;

(ii) மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வாகனம் ஒன்றையும் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்துகின்றாரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2035/ ’11

11.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் பிரதிநிதிகள் அல்லாத நபர்களின் பாதுகாப்புக்காக அரச பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா;

(ii) அவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தகவல்கள் யாவை,

(iii) இவர்களின் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களா, அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களா, அல்லது இராணுவ உத்தியோகத்தர்களா;

(iv) மேற்கூறியவாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்டுள்ள பின்தொடர் பாதுகாப்பு வாகனங்களின் ( Backup vehicles) எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எவரேனும் ஒருவருக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை தீர்மானிக்கின்ற அதிகாரம்வாய்ந்தவர் யார்;

(ii) அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படும் முறையியல் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2269/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மீண்டுவரும் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி மீண்டுவரும் செலவினங்களுக்கு ஒப்பீட்டளவில் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவுக்கு அதிக நிதியை ஒதுக்குவது உகந்ததென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1657/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 2005-2006 கல்வி ஆண்டு முதல் 2010-2011 கல்வி ஆண்டு வரை அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) 2009-2010 மற்றும் 2010-2011 கல்வி ஆண்டுகளில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2009-2010 ஆம் கல்வி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010-2011 கல்வி ஆண்டில் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் ஏதேனும் குறைவு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1748/ '11

14\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 இலிருந்து 2011 வரை இலங்கை அரசாங்கம் ஈடுபட்ட சீனக் கருத்திட்டங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) அக் கருத்திட்டங்களின் பெயர்களையும்;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் முழுப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் சீன உதவியின் பாகத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு கருத்திட்டத்திலும் வேலைக்கமர்த்துமாறு சீனக் கம்பனியினால் தேவைப்படுத்தப்பட்ட சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாக ஆண்டுவாரியாகவும்;

(ii) சீனத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சீனக் கம்பனிகளின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்குவதற்கான நியாயப்படுத்தல்களையும் வலுவான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2036/ '11

15\.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அந்த நிறுவனத்தினால் வருடாந்தம் செலவு செய்யப்பட்டுள்ள தொகை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு செய்துள்ள தொகை;

(iii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் இருந்த நாட்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகத்தர்கள் மேற்கூறியவாறு வெளிநாடு சென்றதனால் கிரிகெட் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த சாதகமான அல்லது பாதகமான பெறுபேறுகள் யாவை;

(ii) வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் தங்குமிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் சுற்றுலா விபரக் குறிப்புக்களை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2011.04.07ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2012.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2012 மார்ச்சு மாதம் 30 ஆம் திகதிய 1751/27ஆம் இலக்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கட்டளை,— 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2012 மார்ச்சு மாதம் 30ஆம் திகதிய 1751/28ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கட்டளை,— (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரினால் மது தொடர்பில் விதிக்கப்பட்டு 2012 மார்ச்சு மாதம் 30ஆம் திகதிய 1751/29ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல்கள் இலக்கம் 947, 948, 949 மற்றும் 950)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2)ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் மதுசாரம் தொடர்பில் விதிக்கப்பட்டு 2012 மார்ச்சு மாதம் 30 ஆம் திகதிய 1751/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 951)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 8.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 12.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.